# 2010–2011 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகள்

**அறிவிப்பு 13**

வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 64 வழியோர குடியிருப்புகளுக்கு காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கையை நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. விரிவான கலந்தாய்விற்குபின் தற்போது இந்த திட்ட அறிக்கை நாளொன்றுக்கு 270 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கும் வகையில் ரூ.1800 கோடி மதிப்பீட்டில் திருத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான அறிக்கையை ஆய்வு செய்ய ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டு அவரது பூர்வாங்க அறிக்கை பெறப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்திற்கு ரூ.1500 கோடி வரை நிதியுதவி செய்ய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர மேம்பாட்டு நிறுவனம் (HUDCO) இசைவளித்துள்ளது. ஆலோசகரது முடிவான அறிக்கை பெறப்பட்ட பின் இத்திட்டத்திற்கான மொத்த செலவிற்கும் நிதியாதாரம் ஏற்பாடு செய்யப்பட்டு நடப்பு நிதியாண்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு 14**

2008–09 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் மேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது கலந்தாய்வுக்குப் பின் இத்திட்டம் விரிவாக்கப்பட்டு, மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, பரவை, விளாங்குடி, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 1430 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சி ஆகியவற்றிலுள்ள சுமார் 12,15,000 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.806 கோடி மதிப்பீட்டில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் நிதியாதாரம் பெற்றும், குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின் நிதியாதாரம் பெற்றும், செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**அறிவிப்பு 15**

விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் 11 ஒன்றியங்களைச் சேர்ந்த 1457 குடியிருப்புகளிலுள்ள 11,00,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.572 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

**அறிவிப்பு 16**

புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, அன்னவாசல், பொன்னமராவதி, குண்ணான்டார்கோயில் மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 1130 குடியிருப்புகளிலுள்ள 3,20,000 மக்கள் பயன்பெறும் வகையில், ரூ.127.50 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரத்துடன் செயல்படுத்தப்படும்.

**அறிவிப்பு 17**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி மற்றும் மணச்சநல்லூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 204 ஊரக குடியிருப்புகளிலுள்ள 1,13,000 மக்கள் பயனடையும் வகையில், ரூ.22 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதியாதாரம் கொண்டு செயல்படுத்தப்படும்.

**அறிவிப்பு 18**

கிராமப்புரங்களிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்க உருவாக்கப்பட்ட ஜல்மானி திட்டத்தின் கீழ் குடிநீர் சுத்திகரிப்பு கலன்கள் 6000 பள்ளிகளில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதியுதவியுடன் நிறுவப்படும்.

**அறிவிப்பு 19**

த.கு.வ. வாரியத்தித்தின் பணிகளை மேம்படுத்திட, கருணை அடிப்படையில், இளநிலை வரைவு அலுவலர், இளநிலை உதவியாளர், பதிவறை எழுத்தர் ஆகிய பணியிடங்களில் 112 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்படும்.

**அறிவிப்பு 20**

மத்திய அரசின் கிராம குடிநீர்த் திட்ட விதிமுறைகளின்படி 7000 கிராமக் குடியிருப்புகளிலுள்ள முழுமையாகக் குடிநீர் வசதி பெறாத மக்களுக்கு, ரூ.380.61 கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

**அறிவிப்பு 21**

19 மாவட்டங்களில், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 1009 கிராம குடியிருப்புகளிலுள்ள 5,71,000 மக்கள் பயனடையும் வகையில், ரூபாய் 173,50 கோடி மதிப்பீட்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் குடிநீர் வசதி செய்து தரப்படும்.